உ

சிவமயம்



யாழ்ப்பாணம் மாதகலை பிறப்பிடமாகவும் பிரான்சை வதிவிடமாகவும் கொண்ட

அமரர்

# திரு. சுப்பிரமணியம் இந்திரகுமார்

அவர்களின் சிவபதப்பேறு குறித்த

# நினைவு சிமிழ்

16.11.2013

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



யாழ்ப்பாணம் மாதகலை பிறப்பிடமாகவும் பிரான்சை வதிவிடமாகவும் கொண்ட

அமரர்

# திரு. சுப்பிரமணியம் இந்திரகுமார்



அவர்களின் சிவபதப்பேறு குறித்த

# நினைவு சிமிழ்



**16.11.2013**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ



# சமர்ப்பணம்



நல்லறமாய் இல்லறத்தை இனிதாக்கி
நல்விருட்சமாய் நின்று நிழல்பரப்பி
எம் உயர்விற்காய் உமை உருக்கி
எங்கள் எல்லோரினது இதயங்களிலும்
இன்முகத்துடன் குடிகொண்ட
எங்கள் தெய்வமே!
நாம் தங்கள் பாதங்களில்
கண்ணீருடன் ஏற்றும் இந்த அஞ்சலித்
தீபத்தை ஏற்றுக்கொள்ளுங்கள்



பிள்ளைகள்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்



# திருமறை தோத்திரப் பாடல்கள்

திருச்சிற்றம்பலம்

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே

பாலும் தெளிதேனும் பாகும் பருப்புமிவை
நாலுங் கலந்துனக்கு நான் தருவேன் - கோலம் செய்
துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீயெனக்குச்
சங்கத் தமிழ் மூன்றுந் தா.

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான் - விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாந் தன்மையினால்
கண்ணிற் பணிமின் கனிந்து

## தேவாரம்

எத்தாயார் எத்தந்தை எச்சுற்றத்தார்
எம்மாடு சும்மாடாம் ஏவர் நல்லார்
செத்தால்வந் துதவுவார் ஒருவரில்லை
சிறுவிறகால் தீமூட்டிச் செல்லா நிற்பர்
சித்தாய வேடத்தாய் நீடு பொன்னித்
திருவானைக் காவுடைய செல்வா என்றன்
அத்தாவுன் பொற்பாதம் அடையப் பெற்றால்
அல்லகண்டங்கொண்டடியேன் என் செய்கேனோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

அன்றே என்றன் ஆவியும்
உடலும் உடைமை எல்லாமும்
குன்றே அனையாய் என்னை
ஆட்கொண்ட போதே கொண்டிலையே
இன்றோர் இடையூறெனக் குண்டோ
எண் தோள் முக்கண் எம்மானே
நன்றே செய்வாய் பிழை செய்வாய்
நானோ இதற்கு நாயகமே

## திருவிசைப்பா

ஏறீறணி பவளக் குன்றமே நின்ற
நெற்றிக்கண்ணுடைய தோர் நெருப்பே
வேரணி புவன போகமே யோக
வெள்ளமே மேருவில் வீரா
ஆறணி சடையெம் மற்புதக் கூத்தா
வம்பொன் செயம் அம்பலத்தரசே
ஏறணி கொடியெம் மீசனே உன்னைத்
தொண்டனே விசையுமா றிசையே.

## திருப்பல்லாண்டு

குழலொலி யாழொலி கூத்தொலி
ஏத்தொலி எங்கும் குழாம் பெருகி
விழாவொலி விண்ணளவுஞ் சென்று
விம்மி மிகு திருவாரூரின்
மழவிடையாற்கு வழி வழி
யாளாய் மணஞ்செய் குடிப்பிறந்த
பழ அடியாரொடுங் கூடி
எம் மானுக் கேபல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

மண்ணுல கத்தினிற் பிறவி மாசற
எண்ணியே பொருளெலா மெளிதின் முற்றுறக்
கண்ணுத லுடையதோர் களிற்று மாமுகப்
பண்ணவன் மலரடி பணிந்து போற்றுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புகழ்

இருந்த வீடும் கொஞ்சிய சிறுவரும் உறுகேளும்
இசைந்த வூரும் பெண்டிரு மிளமையும் வளமேவும்
விரிந்த நாடும் குன்றமும் நிலையென மகிழாதே
விளங்கு தீபங் கொண்டுனை வழிபட அருள்வாயே
குருந்திலேறுங் கொண்டலின் வடிவினன் மருகோனே
குலங்குலாவுங் குன்றுறை குறமகள் மணவாளா
திருந்த வேதத் தண்டமிழ் தெரிதரு புலவோனே
சிவந்த காலும் தண்டையுமழகிய பெருமாளே.


## பட்டினத்தார் திருப்பாடல்

கல்லாப் பிழையுங் கருதாப் பிழையுங் கசிந்துருகி
நில்லாப் பிழையும் நினையாப் பிழையும் நின்னஞ் செழுத்தைச்
சொல்லாப் பிழையுந் துதியாப் பிழையுந் தொழாப் பிழையும்
எல்லாப் பிழையும் பொறுத்தருள்வாய் கச்சியேகம்பனே

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ்சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலாதுயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

திருச்சிற்றம்பலம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர்.திரு.சுப்பிரமணியம் இந்திரகுமார் அவர்களின்
## வாழ்க்கை சுவடுகள்

ஈழமணித் திருநாட்டின் வடமேற்கில் அமைந்துள்ளது. மாதகல் இது வரலாற்றுக் காலத்திலிருந்து பெயர் பெற்று விளங்குகின்றது. இலங்கைக்கு வெள்ளரச மரக்கிளையை கொண்டு வந்த பிக்குணி சங்கமித்தை சம்பில்துறை முகத்தில் வந்திறங்கியமை காரணமாக மகாவம்சம் யம்புக்கோல பட்டணம் என்று விளம்பி நிற்கின்றது. இன்று சம்பில்துறைகளில் சங்கமித்தை சிலை நிறுவப்பட்டு தென்னிலங்கை மக்கள் தரிசிக்கும் இடமாக மிளிர்கின்றது.

மாதகல் பதியினிலே சைவமும் தமிழும் மிளிரப்பெற்று விருந்தோம்பும் பண்பு செழித்து விளங்கும் சைவ வேளாள குலத்தில் வாழ்ந்த சுப்பிரமணியத் திற்கும் சரஸ்வதிக்கும் ஆறு ஆண்பிள்ளைகளும் ஒரு பெண் பிள்ளையும் அவதரித்தனர். அற்புதலிங்கம், மகேந்திரம், சுந்தரலிங்கம் **(அமரர்)**, குலஞானேஸ்வரன்**(அமரர்)**,சந்திரகுமார்**(அமரர்)**,இந்திரகுமார்**(அமரர்)**,புவனேஸ்வரி என்பவர்களாவர்.

திரு.இந்திரகுமார் அவர்கள் 14.06.1966ல் பிறந்தார். தனது ஆரம்பக் கல்வியை யா/மாதகல் விக்கினேஸ்வரா வித்தியாலயத்திலும் தன் இடை நிலைக கல்வியை யா/மாதகல் சென்.ஜோசவ் மகா வித்தியாலயத்திலும் கற்றார். பின்பு அவர் தனது குடும்ப சூழ்நிலை காரணமாக பிரான்ஸ் நாட்டுக்குச் சென்றார். அங்கு அகதி அந்தஸ்துடன் வாழ்ந்து வந்தார்.

இவர் தம் உற்றார்கள் இவரை இல்லற வாழ்வில் புகுத்த விரும்பி மாதகலைச் சேர்ந்த பாலசிங்கம் சோதி தம்பதிகளின் கனிஸ்ட புதல்வி நவலக்சுமியை தெரிவு செய்தனர். மணமகன், மணமகள் இருவர் சம்மதத்துடனும் பெரியோர்களால் 1999ம் ஆண்டு இவர்களுக்கு திருமணம் நடைபெற்றது. 2000ம் ஆண்டில் நவலக்சுமி பிரான்ஸ் சென்றார். இவர் தம் இல்லற வாழ்வின் பயனாக கௌதம், பிரகாஷ் என்னும் இரு செல்வங்களை பெற்றெடுத்தார். அவர்களுடனும் கணவருடனும் சந்தோஷமாக வாழ்ந்து வரும் காலத்தில் காலனுக்கு பொறுக்கவில்லை போலும். 24.02.2005ம் ஆண்டு அன்று இவர் இறைவனடி எய்தினார்.

திரு.இந்திரகுமார் தனது பிள்ளைகளை தந்தையும் தாயுமாக இருந்து வளர்த்து வந்தார். இவர் வெளிநாடு சென்றபோதும் இவரின் நாட்டுப்பற்றும், இனப்பற்றும், கிராமப் பற்றும் விட்டு விலகவில்லை. தான் அகதியாக இருந்து கிடைக்கும் வருமானத்தில் ஒரு பகுதியை தனது இனம், தனது கிராமம், பயன் பெறுவதற்காக செலவிட்டார். மேலும் ஒரு பகுதியை சகோதரர்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நலனுக்காக உதவி வந்தார். இவர் பிரான்ஸ் மாதகல் அபிவிருத்திச் சங்கத்தின் ஒரு உறுப்பினராகவும் இருந்தார்.

அன்பு, புறங்கூறாமை, பிறருக்கு உதவி செய்தல், தீமையிலும் நன்மையை எடுத்துக் கொள்ளும் பாங்கு, வந்தோரை இன்முகத்துடன் வரவேற்றல், விருந்தோம்பல் செய்தல் என்பனவாகும். இதனால் இவரை எல்லோரும் "இந்திரி"என அன்பாக அழைப்பார்கள்.

இவரின் இறுதி வாழ்வு இருதய நோய் காரணமாக நீண்டகாலம் மண்ணில் நிலைக்க முடியாமல் போனது.

**"இறைவன் ஒரு குயவன் அவன் வனைந்த பானை**
**ஏதோ ஒரு நாளில் உடைந்து போவது உறுதி"**

என்ற வாக்கிற்கிணங்க 17.10.2013 அன்று இவர் இறைவனடி சேர்ந்தார்.

**" வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர் வானுறையும்**
**தெய்வத்துள் வைக்கப்படும்"**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிள்ளைகளின் கண்ணீர்

அன்போடு அணைத்தெடுத்து அறிவு சொல்ல
ஆற்றல்கள் பலவீந்து அன்பு கொஞ்சி
பொன்போல வளர்த்தீரே புகழே அப்பா
புலம்பியழ வைத்தின்று எங்கே போனீர்!
இன்பமொடு மகன் என்றே நெஞ்சில்
இதங்கமழ அருகமர்த்தி உணவு ஊட்டி
எம் பெருமை உயரவெனக் கனவு கண்டீர்!
ஏனப்பா நாம் துடிக்க ஏகிப்போனீர்

**கௌதம்,பிரகாஷ்**

## சகோதர சகோதரியர் புலம்பல்

எங்களது குலமுதல்வர் மூத்த அண்ணா
இன்றும்மைக் காணாது துடிக்கின் றோம்நாம்
திங்களது இல்லாத வாகனம் போலச்
செகமதனில் நாமின்று உள்ளோம் அண்ணா
பொங்கிவரும் ஆசையுடன் கதைகள் சொல்வீர்
புத்திமதி கூறியெமை நடத்திக் கொள்வீர்
இங்கினிமேல் எமக்குதவி யார்தான் அண்ணா
இயம்பிடுவீர் ஏங்கிநிதம் தவிக்கின் றோமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மைத்துனர், மைத்துனிமார் புலம்பல்

அத்தானே எங்களது குலத்தின் மூத்தோய்
அகிலத்தில் உமையினிமேற் காண்ப தெப்போ
சொத்தாக எமக்கென்றும் விளங்கி னீரே
சோகமதைத் தந்தின்று மறைந்து போனீர்
எத்தேசம் போனாலும் எம்மை எண்ணி
இனிமையோடு நினைக்குமெங்கள் அன்பு அத்தான்
செத்தாலும் நாங்களென்றும் மறக்க மாட்டோம்
செகமீதில் உங்களது புகழும் வாழும்.

## மருமக்கள் புலம்பல்


எங்கள் மாமாவே! மறைந்து விட்டீர்
பேதலித்து மனமதுதான் நொந்து போனாம்
ஒருமித்து எங்களொடு சேர்ந்து கொண்டு
உற்றதொரு துணையாக வாழ்ந்து சென்றீர்
முருகனுக்கு பெருவீதி அமைத்தி டற்கு
முழுமூச்சாய்த் தொண்டெல்லாம் செய்தீர் அன்று
அருமைக்கோர் இருப்பிடமே அன்பின் மாமா
அழுதுநிதம் புலம்புகிறோம் ஓடி வாரீர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறக்கலாமோ உன்னை!

சித்தப்பா!சித்தப்பா!என அழைத்தகாலம்
அன்பு மொழி பேசி பகிடிவிட்டு
நாம் வாழ்ந்த பசுமைக்கால நினைவலைகள்
எக்கணமும் மின்னவிட துவழுகின்றோம்
பிரான்சில் நீங்கள் இருந்த காலம்
உம் அழைப்பிற்காக காத்திருந்து
அடிபட்டு பிடிபட்டு உம்மன்பை பகிர்ந்திட்டோம்
நீங்கள் வாழ்ந்த காலமதில்'
செல்போனில் உம் வளமறிந்து உளம் மகிழ்ந்தோம்
உம் குடும்பம் எமைக்காண கூட்டாக ஓர் நாள்
வந்திடுவீர் மகிழ்விப்பீர் என நான் காத்திருந்தேன்



ம.ரதீஸ்கா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாட்டிடும் நினைவுகளில்

மாதகலில் பிறந்து மாதகலில் வளர்ந்து
பிரான்சில் வாழ்ந்த எங்கள் மாமா
நம்மைப் பிரிந்தார் என்ற செய்தி
வந்தது. நெஞ்சம் வெந்தது! வெந்தது!
உப்புப் பானையில் ஓட்டிய மண்போல்
பயனில்லாத பதர் மாய்ந்தாலும்
வருந்துதல் உலகில் இருந்திடும் வழக்கம்
ஆனால் எமதருமை மாமாவே
உம் நினைவலையால் கண்ணில்
வடிக்கின்ற நீராக தம் நினைவுதனை
சமர்ப்பிக்கின்றோம் தாளதனில்
உம் ஆத்மா சாந்திக்காக இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.



ஞானசீலன்,தர்மசீலன்,பிறேமசீலன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறவோம் எம் வாழ்வில்

சிரித்த முகமே சீரிய
நன்னடையும்
அனைவரையும் அரவணைக்கும்
இனிய பேச்சுமுள்ள
என் அன்பான மாமாவே!
என்றுமே மறவேன் நான்

அன்புடனே எனக்கு தொலைபேசியில்
அறிவுரைகள் பல கூறிடுவீர்
பண்புடனே வாழ்ந்திடவே
பலவுரைகள் கூறிடுவீர்
தவறுகள் நான் செய்தால்
உரிமையுடன் அதட்டியே பேசிடுவீர்.

எழுதிச் செல்லும் விதியின் கைகள்
எழுதி முடித்த காரியமே!
அழுத விழிகள் காயவில்லை
அன்பனை இழந்த துயரிதுவோ?
விதியே விதியே என் செய்தாய்?
நீயும் சதி கொண்டழைத்தது சரிதானோ?



இதய வலிகளுடன்
சுபாஜினி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாமன் மாமியின் துயர் மடல்

ஆருயிர் முற்றும் கலந்த மருமகனாகி
தூரத்தில் இருந்து அன்பீந்தீர்!
பேரழகும் பெருமைமிகு பண்பும் அறிவும்
பெருகிவர ஒளியீந்தீர்!
எங்கள் குலத்தின் விளக்காக ஒளியீந்து
எமக்கெல்லாம் உம் பணியால்
நிறைவை ஈந்தீர்!
சொல்லாமல் கொள்ளாமல்
மின்னாமல் முழங்காமல் வந்த மழைபோல்
கரம்பட்டு எங்கே போனீர்!
குலம் விளங்க வந்த தீபமே
உம் நினைவு சுமந்து உருகுகிறோம்!
அன்பு முகம் காணாமல் அலறுகிறோம்!
உங்கள் நினைவோடு.....
என்றும் இங்கு நாம் வாழ்வோம்!
உங்களது
உயர்ந்த ஆத்ம சாந்திக்காய்......
நாமெல்லாம் மலர் தூவி
அஞ்சலித்தோம்! அமைதி கொள்க!



**பாலசிங்கம் சோதி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் பாசமான பெரியப்பாவுக்கு கண்ணீருடன் ஒரு மடல்

அன்பு பெரியப்பாவே! ஆசை பெரியப்பாவே! உங்கள் பாசத்தை
எழுத்திலே எழுதிவிடலாமோ? ஏன் பெரியப்பா எங்களை பிரிந்து
சென்றீர்கள்...? நாங்கள் உங்களை இனிமேல் பார்க்கவே முடியாதா?
பாடசாலை விடுமுறை என்றால் உங்கள் இல்லம் தானே
எங்களுக்கு பிருந்தாவன பூங்காவனம்
இனியார் பெரியப்பா உங்களை போல அன்பு வைத்து கண்டிப்பாக எங்களை கவனிப்பார்கள்
இனிவரும் விடுமுறைந காலங்கள் எல்லாம் எங்களுக்கு பாலைவனம் தானே?
பெரியப்பாக எங்களுக்கு பெரியம்மாவின் அன்பையும் சேர்த்து நீங்களே ஊட்டி வளர்த்தீர்கள்
இப்போ பாதியிலே உங்கள் அன்பையும் இறைவன் தனதாக்கி கொண்டான்.
நல்லவர்கள் பூமியிலே அதிக காலம் வாழ்வதில்லையே.
நீங்களும் பெரியம்மாவும் இறைவன் மடியில் நிம்மதியாக நித்திரை கொள்ளுங்கோ
எங்கள் விட்டு பூஜையறையில் நாங்கள் உங்களை தினமும் பார்த்து கதைப்போம்.
எங்கள் நெஞ்சிருக்கும்வரை உங்கள் நினைவுகளோடு நாங்கள் வாழ்வோம்.
நாங்கள் நால்வரும் (கௌதம்.திலன்.பிரகாஷ்.அட்சியா)
ஒற்றுமையாக உங்கள் இலட்சியங்களோடு வாழ்வோம்.
பெரியப்பா.பெரியம்மா எங்களோடு வாழ்வதற்கு மீண்டும் பிறந்து வாருங்கள்

என்றும் கண்ணீருடன் பாசமான

**திலன்.அட்சியா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடன் பிறவா சகோதரர்களின் துயரம்

ஆறாத துயரில் ஆழ்த்தி விட்டு
மீளாத்துயில் கொண்டாயோ?
ஏன் இந்தக் காலன் பறிப்பு?
ஏன் இந்த சோகம் மீண்டும் மீண்டும் எமக்கு?
இனி எங்கே இந்த குரல் கேட்போம்?
இனி எங்கே எங்கள் அண்ணனை காண்போம்?
அப்பா இழந்த எங்களுக்கு, ஒரு அண்ணனாக இருந்து
அப்பாவின் கடைசி நேரத்தில் எங்களுக்கு
துணையாக இருந்தீர்களே!
அதற்குள் காலன் உன்னை அழைத்து விட்டான்?
மணவாழ்வில் ஐந்து வருடத்தை முடித்து விட்டது விதி.
பின்பு பிள்ளைகளுடன் வாழ கூட விதி விடவில்லை போலும்
கதறுகிறோம்............. கதறுகிறோம்
எங்களுக்குத் தான் ஈடு செய்ய முடியாத பேரிழப்புக்கள

பொன்னுத்துரையின் வாரிசுகள்
விக்டர், வினோத், விதுசா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உன் உயிர்கொடுத்து, என் உயிரில் கலந்த என் அப்பாவே!

அப்பா,அப்பா, அப்பா கேட்கிறதா? என் குரல்
அப்பா எதையெல்லாம் இழக்க கூடாதோ
அதை எல்லாம் இழந்து விட்டேன் அப்பா மூன்று வயதில் என் அம்மா
ஊட்டிய பால் மணம் மாறுமுன்னே என் அம்மாவை இழந்தேன்.
அந்த நாளில் அம்மா நித்திரையில் இருப்பதாக நினைத்தேனே.
அம்மா நினைப்பே இல்லாமல் 12 வயது வரை
அப்பாவும் அம்மாவுமாக நீங்களே என்னை பராமரித்து வந்தீர்களே
எனக்கு அம்மா இல்லையே என்ற சூழலிலே நான் வளரவில்லையே?
இனிவரும் காலங்கள் என் நிலைமை என்ன அப்பா?
நீங்கள் நினைத்து பார்க்கவே இல்லையா?
என்னை நிறையவே ஏமாற்றி விட்டீர்கள். நான் உங்களால்
ஏமாற்றப்பட்டேன்,கலங்குகிறேன், வெதும்புகிறேன்.

அப்பா இறுதி நாள் (18.10.2013) நான் வழமை போலவே எனது காலைக் கடமைகளை முடித்துக் கொண்டு பாடசாலைக்கு போகும் முன்பு உங்களிடம் சொல்லிவிட்டு போவதற்காக நித்திரையில் இருந்த உங்களை எழுப்பினேன். நீங்கள் எழும்பவே இல்லை. நான் நினைத்தேன், நீங்கள் ஆழ்ந்த நித்திரையில் இருப்பதாக வீட்டுக்கு முன்பு இருக்கும் பஸ் தரிப்பிடத்திலே நின்று யன்னலைப் பார்த்தேன். ஏனெனில் நீங்கள் ஒவ்வொரு நாளும் ஜன்னலில் நின்று கை அசைப்பீர்களே அன்று ஜன்னல் பக்கமும் நீங்கள்வரவில்லையே, பஸ்சும் வந்துவிட்டது.
நான் அதில் பயணம் செய்து கொண்டே என்ன அப்பா இப்படி இன்று ஆழ்ந்த நித்திரையில் இருக்கிறாரே? எழும்பி இன்று வரவில்லையே என்று யோசித்தபடிதான் நான் பாடசாலைக்கு போனேன்.
ஆனால் அப்ப தெரியவில்லையே! என் வாழ்க்கை வானத்து சூரியன் இன்று உதிக்கவே இல்லை என்று. என் தலையில் இடி விழும் என்று கனவில் கூட நினைத்துப் பார்க்கவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பா என்னையும் என் தம்பி பிரகாஷையும் என்ன நினைவில் விட்டு சென்றீர்கள்?
நீங்கள் இல்லாமல் நாங்கள் எப்படி அப்பா?
அப்பா நீங்கள் எவ்வளவோ வேதனையோடும் தேகவலிகளோடும்
வைத்தியசாலையில் வாழ்ந்த காலங்கள் எல்லாமே என் மனத்திரையில்
உங்களிடத்திலும் என்னை உங்கள் கண்ணுக்குள்ளேயே வைத்திருந்தீர்களே
அப்பா நீங்கள் எனக்கும் தம்பிக்கும் இன்னொரு அப்பா அம்மாவை
தந்து விட்டுச் சென்றீர்கள். நாங்கள் அவர்கள் சொல் கேட்டு நல்ல
பிள்ளைகளாக இருந்து நன்றாக கல்வி கற்று
உங்கள் இலட்சியங்களை நிறைவேற்றுவோம்.
நீங்கள் எங்கள் உயிரோடு கலந்து எங்களுக்குள்ளே
வாழ்ந்து கொண்டிருப்பீர்கள்
அப்பா மீண்டும் மறு ஜென்மத்தில் நீங்களும் அம்மாவும் நீண்ட ஆயுளோடு
சந்தோஷமாக இணைந்து நீண்ட காலம் வாழவேண்டும்.
நாங்களே உங்களுக்கு பிள்ளைகளாக பிறக்க வேண்டும்.
அப்பா பிறந்த வீட்டில் தந்தையை இழந்தால் கல்வியை இழந்துவிடுவோமா?
தாயை இழந்தால் சீர்வரிசையை இழந்து விடுவோமோ?
எங்கள் வானத்து சூரியன் சந்திரன் எங்கே தேடுகிறோம்?
தேடிக்கொண்டே இருப்போம். எங்கள் நெஞ்சிருக்கும் வரை
எங்கள் அப்பா அம்மாவை ?

**என்றும் கண்ணீருடன் அன்பு மகன்**
**கௌதம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் சுவாசத்தில் கலந்த என் உயிர் அப்பாவே!

அப்பா நான் உங்களை நேசித்ததை விட நீங்கள் என் மீது உயிரை வைத்து வளர்த்தீர்களே! என்னால் நம்ப முடியவில்லையே நீங்கள் இன்று என்னோடு இல்லையென்பதை. அம்மா ஊட்டிய பால் சுவை திகட்ட முன்பே அம்மாவை பிரிந்தேனே. அம்மா ஞாபகமே வராமல் அப்பா அம்மாவாக நீங்கள் இருந்தீர்களே! என்னுடைய ஒன்பதாவது அகவையில் உங்களையும் இழந்து விட்டேனே! நான் என்ன பாவம் செய்தேன் அப்பா!

அப்பா ஏதொ ஒரு விதத்தில் நான் அதிஸ்டமானவன். ஏனெனில் என்னை பெற்றெடுத்த அம்மா உருவில் என்னை பாசத்தோடும் அன்போடும் பார்த்து கொள்வதற்கு இன்னொரு அப்பா அம்மா நீங்கள் தந்திருக்கிறீர்கள், அல்லவா? நானும் அண்ணாவும் அவர்களோடு நல்ல பிள்ளைகளாக இருந்து, நன்றாக படித்து, உங்களது இலட்சியங்களை நிறைவேற்றுவோம்.

எங்கள் அப்பா மகன் பந்தத்தை வார்த்தைகளால் எழுதிவிடமுடியுமா? அடுத்த ஜென்மத்திலாவது உங்களுடனும் அம்மாவுடனும் நீண்ட காலம் நானும் அண்ணாவும் சந்தோஷமாக வாழவேண்டும் என்று இறைவனிடம் வேண்டுகிறேன்.

**என்றும் கண்ணீருடன் அன்பு மகன்**
பிரகாஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரான்ஸ் மாதகல் நலன்புரிச் சங்கத்தின் .
# இரங்கல் செய்தி

ஒவ்வொரு மனிதனுக்கும் இரண்டு உலகங்கள்,ஏற்கனவே படைக்கப்பட்ட உலகம், அது பொது உலகம். அவனவன் படைத்துக்கொள்கிற உலகம், அது தனி உலகம். வாயு மண்டலம் சூழ்ந்து விட்டால் புற உலகம் பொருளற்றதாகி விடும். பாச மண்டலம் சூழ்ந்திராவிட்டால் அக உலகம் அர்த்தமற்றதாகி விடும். எங்கள் அக உலகத்தில், உள்ளத்தின் சூழத்தில் இருந்து வரும் இனிய சொற்களாலும் சற்றும் மிகை இல்லாத சகோதர நேசத்தாலும், எங்கள் நெஞ்சங்களில் மழைபோல் விழுந்து, பனிபோல் படர்ந்து, மலராய் மலர்ந்தவன் பாசத்துக்குரிய நண்பன் இந்திரகுமார்.

ஒழுக்கம்-உண்மை-உழைப்பு உள்ளவன்,பொறுமை-திறமை-கருணை கொண்டவன் பதறாத பரபரப்போடும்-சுதிமாறாத சுறுசுறுப்போடும். ஒவ்வொரு கணமும் உற்சாகத்துடனும் எம்மைச் சுற்றி வந்தவன். அவன் எல்லோரையும் கவர்ந்திடும் ஒரு புன்சிரிப்பாளன். அந்தச் சிரிப்பு அவன் உள்ளே எரிகிற விளக்கின் வெளியே அடிக்கிற வெளிச்சம்.........

அந்தச் சிரிப்பே அவன் நெஞ்சைத் திறந்து காட்டும் கண்ணாடி............

அவனைப் போலவே அவன் வாழ்ந்த வீடும், அது வெறும் அஸ்திவாரக்கற்களால் நிற்கவில்லை. கருணையால் நிற்பதாகவே நினைத்துக்கொள்வோம்..........

உயிரைச் சுத்திகரிக்கும் ஆயதம் அன்பு தான் என்பதை அறிந்தவன். ஆனால் எந்த விடயத்திலும் செம்மை காண்பவன். செம்மை கண்டபோதெல்லாம் பொங்கி வழிவதும் சிறுமை கண்டபோதெல்லாம் பொங்கி வழிவதுமே அவன் குணங்கள். அதைவிட அவனுள் நாம் கண்டு வியந்தது அவனுள் கனலும் அக்கினி தோற்றுப் போவதற்காகவே காற்றோடு யுத்தம் செய்யும் மெழுகுவர்த்தியின் நெருப்பல்ல அது. அது ஒரு நிஜ நெருப்பு.

புன்னகையை, கண்ணீரை, சோகங்களை, உடல்வலிகளோடு கடந்து போன நேற்றுக்களை, நம்பிக்கைகளை நாற்றாய்ப் போட்ட நாட்களையெல்லாம் தனக்குள் பெற்றோலாய் ஊற்றிக்கொண்டு மனித நேசத்திற்காய்ப் பிரகாசித்து எரிந்த மங்காத நெருப்பு அவன். முள்ளில் நடந்து சென்று பூப்பறிக்கும் சம்பவம் தான் வாழ்க்கை என்பது அதில் முள்ளை மற பூவை நினை! என்ற நம்பிக்கையை வாழ்க்கைப்படுத்தியவன் இந்திரகுமார். இரண்டு கைக்குழந்தைகளை விட்டுவிட்டு மனைவி இறந்தபோதும் சரி. அதே காலப்பகுதியில் தீராத நோயில்தான் அவதியுற்றபோதும் சரி, இழப்பின் சோகம் இருந்தது. ஆனால் அவன் இழந்து போய் விடவில்லை. முகத்தில் தளர்ச்சி இருந்தது -

ஆனால் அவன் தளர்ந்துபோய்விடவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரணம் எப்படி நிஜமோ-வாழ்க்கை மிச்சம் இருக்கிறது என்பதும் நிஜம்தானே? பாசம் உண்மைதான். நேசம் உண்மைதான். இழப்பும் உண்மைதான். ஆனால் எந்த மரணமும் அஸ்தமனம் அல்ல. எனவே தன் செல்வங்களை வளர்த்து ஆளாக்கத் தானே தாயும் தந்தையுமானான். இதற்கெல்லாம் மூலம் அவனுள் எரிகின்ற அணையாத அக்னி. அசல் நெருப்பு என்றும் அணைவதில்லை.
மரணக்காள்ளில் கூட ................ உண்மைதான் ...........
17.10.2013 எங்கள் நெஞ்சில் நெருப்பானான் எங்கள் நண்பன்.......
தான் உதிரும் முதல் நிமிடம் வரைக்கும் இந்த பிரபஞ்சத்தின் சந்தோஷத்தை மட்டுமே காற்றோடு பேசிக் கொண்டிருக்கும் தென்னங்கீற்றைப் போல நண்பர்களுடன் பேசி விட்டுப்படுத்தவன்..... மறுநாள் காலை, சூரியன் உதித்தான். உலகை ஒளி ஏற்ற இந்திரி ஒளியானான். எங்கள் உள்ளத்தில் இந்தப் பாச மண்டலத்தை ஒளியேற்ற எங்கள் பிரான்ஸ் மாதகல் நலன்புரி சங்கத்தை உருவாக்க பக்க பலமாய் நின்றவனும், எமது சிறார்களுக்கு இந்திரிமாமாவாய் தமிழ்ப்பாடசாலை நடத்தியவனும் இன்று எம்மிடையே இல்லை.
அவன் ஆத்மா சாந்திக்காய் பிரார்த்திப்போம்.

**ஓம் சாந்தி!ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கந்தசஷ்டி கவசம்

## காப்பு

அமரர் இடர் தீர அமரம் புரிந்த
குமரன் அடி நெஞ்சே குறி.

### நேரிசை வெண்பா

**துதிப்போர்க்கு வல்வினை போந் துன்பம போம் நெஞ்சிற்**
**பதிப்போர்க்குச் செல்வம் பலித்துக்**
**கதித்து (து) ஓங்கும் நிஷ்டையுங் கைகூடும்**
**நிமலா அருள்கந்தர் சஷ்டிக் கவசம் தனை.**

சஷ்டியை நோக்கச் சரவண பவனார்
சிஷ்டருக் குதவும் செங்கதிர் வேலோன்
பாதம் இரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம் பாடக் கிண்கிணி யாட
மையல் நடனஞ் செயும் மயில்வா கனனார்
கையில் வேலாலெனக் காக்க வென்று வந்தது.
வரவர வேலாயுதனார் வருக
வருக வருக மயிலோன் வருக
இந்திரன் முதலா எண்டிசை போற்ற
மந்திர வடிவேல் வருக வருக
வாசவன் மருகா வருக வருக
நேசக் குறமகள் நினைவோன் வருக
ஆறுமுகம் படைத்த ஐயா வருக
நீறிடும் வேலவன் நித்தம் வருக
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக
சரவண பவனார் சடுதியில் வருக
ரஹண பவச ரரரர ரரர
ரிஹண பவச ரிரிரிரி ரிரிரி
விணப சரவண வீரா நமோநம
நிபவ சரவண நிறநிற நிறென
வசர வணபவ வருக வருக
அசுரர் குடிகெடுத்த ஐயா வருக
என்னை ஆளம் இளையோன் கையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பன்னிரண்டாயுதம் பாசாங் குசமும
பரந்த விழிகள் பன்னிரண் டிலங்க
விரைந்தெனைக் காக்க வேலோன் வருக
ஐயுங் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும் உயிரையுங்கிலியும்
கிலியும் சௌவும் கிளரொளி யையும்
நிலைபெற் றென்முன் நித்தமும் ஒளிரும்
சண்முகன் தீயும் தனியொளி யொவ்வும்
குண்டிலி யாம் சிவ குகன் தினம் வருக
ஆறுமுகமும் அணிமுடி ஆறும்
நீறிடு நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச் செவ் வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈராறு செவியில் இலகு குண்டலமும்
ஆறிரு திண்புயத் தழகிய மார்பில்
பல்பூ ஷணமும் பதக்கமும் தரித்து
நன்மணி பூண்ட நவரத்ன மாலையும்
முப்பரி நூலும் முத்தணி மார்பும்
செப்பழ குடைய திருவயி றுந்தியும்
துவண்ட மருங்கில் சுடரொளிப்பட்டும்
நவரத்தினம் பதித்த நற் சீராவும்
இருதொடை யழகும் இணைமுழந் தாளும்
திருவடி யதனில் சிலம்பொலி முழங்க
செககண செககண செககண செககண
மொகமொக மொகமொக மொகமொக மொகென
நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகுடிகு டிகுகுண டிகுண
ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடு டுடுடு டுடுடு டுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேள் முந்து
என்றனை யாளும் ஏரகச் செல்வ
மைந்தன் வேண்டும் வரமகிழ்ந் துதவும்
லாலா லாலா லாலா வேசமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லீலா லீலா லீலா விநோத னென்று
உன் திருவடியை உறுதியென்றெண்ணும்
என்தலை வைத்துன் இணையடி காக்க
என்னுயிர்க் குயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியால் பாலனைக் காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க
கதிர்வேல் இரண்டும் கண்ணினைக் காக்க
விழிசெவி இரண்டும் வேலவர் காக்க
நாசிக ளிரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க
கன்னமிரண்டும் கதிர்வேல் காக்க
என்னிளங் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை ரத்ன வடிவேல் காக்க
சேரிள முலைமார் திருவேல் காக்க
வடிவே லிருதோள் வளம்பெறக் காக்க
பிடரிக ளிரண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழுபதி னாறும் பருவேல் காக்க
வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க
சிற்றிடை அழகுறச் செவ்வேல் காக்க
நாணாங் கயிற்றை நல்வேல் காக்க
ஆண்பெண் குறிகளை அயில்வேல் காக்க
பிட்ட மிரண்டும் பெருவேல் காக்க
வட்டக் குதத்தை வடிவேல் காக்க
பணைத்தொடை யிரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க
ஐவிரல் அடியினை அருள்வேல் காக்க
கைகள் ளிரண்டும் கருணைவேல் காக்க
முன்கையிரண்டும் முரண்வேல் காக்க
பின்கை யிரண்டும் பின்னவள் இருக்க
நாவிற் சரஸ்வதி நற்றுணையாக
நாவிற் கமலம் நல்வேல் காக்க
முப்பால் நாடியை முனைவேல் காக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எப்பொழுதும் எனை எதிர்வேல் காக்க
அடியேன் வதனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும் பகல் தன்னில் வச்சிரவேல் காக்க
அரையிருள் தன்னில் அனையவேல் காக்க
ஏமத்திற் சாமத்தில் எதிர்வேல் காக்க
தாமதம் நீக்கிச் சதுர்வேல் காக்க
காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியில் நோக்க
தாக்கத் தாக்கத் தடையுறத் தாக்க
பார்க்கப் பார்க்கப் பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகை அகல
வல்ல பூதம் வலாஷ்டிகப் பேய்கள்
அல்லற் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைகள் தின்னும் பழக்கடை முடியும்
கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத தொடரும் பிரமராட் சதரும்
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசி காட்டேரி இத்துன்ப சேனையும்
எல்லிலும் இருட்டிலும் எதிர்ப்படும் மன்னரும்
கனபூசை கொள்ளும் காளியோ டனைவரும்
விட்டாங் காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டாளர்களும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுந் தோடிட
ஆனை யடியினில் அரும்பா வைகளும்
பூனை மயிரும் பிள்ளைக ளென்பும்
நகமும் மயிரும் நீண்முடி மண்டையும்
பாவைகளுடனே பலகல சத்துடன்
மனையிற் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டியப் செருக்கும் பாதையுடன்
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓதம் அஞ்சனமும் ஒரு வழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிட
காலதூதா ளெனைக் கண்டாற் கலங்கிட
அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாய்விட்டலறி மதிகெட் டோடப்
படியினில் முட்டப் பாசக் கயிற்றால்
கட்டுடன் அங்கம் கதறிடக் கட்டு
கட்டி யுருட்டு கால்கை முறியக்
கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு விழிகள் பிதுங்கிட
செக்கு செக்கு செதில் செதிலாக
சொக்கு சொக்கு சூர்ப்பகைச் சொக்கு
குத்து குத்து கூர்வடிவேலால்
பற்று பற்று பகலளவன் தணலெரி
தணலெரி தணலெரி தணலது வாக
விடுவிடு வேலை வெருண்டது வோடப்
புலியும் நரியும் புன்னரி நாயும்
எலியும் கரடியும் இனித் தொடர்ந்தோடத்
தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடிவிட விஷங்கள் எளிதுடன் இறங்க
ஒளிப்புஞ் சுளுக்கும் ஒரு தலை நோயும்
வாதஞ் சயித்தியம் வலிப்புப் பித்தம்
சூலைசயாங் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் பிரிதி
பக்கப் பிளவை படர்தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத் தரணை பருஅரை யாப்பும்
எல்லாப் பிணியும் என்றனைக் கண்டால்
நில்லாதோட நீயெனக் கருள்வாய்
ஈரேழ் உலகமும் எனக்குற வாக
ஆணும் பெண்ணும் அனைவரும் எனக்கா
மண்ணா ளரசரும் மகிழ்ந்துற வாகவும்
உன்னைத் துதிக்க உன்திரு நாமம்
சரவண பவனே சைலொளி பவனே
திரிபுர பவனே திகழொளி பவனே!
பரிபுர பவனே! பவமொழி பவனே!
அரிதிரு மருகா அமரா பதியைத்
காத்துத் தேவர்கள் கடுஞ்சிறை விடுத்தாய்!
கந்தா குகனே கதிர்வேலவனே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கார்த்திகை மைந்தா கடம்பா கடம்பனை
இடும்பனை யழித்த இனியவேல் முருகா!
தணிகா சலனே சங்கரன் புதல்வா!
கதிர்காமத்துறை கதிர்வேல் முருகா
பழனிப் பதிவாழ் பால குமரா
ஆவினன் குடிவாழ் அழகியவேலா
செந்தில்மா மலையுறும் செங்கல்வ ராய!
சமரா புரிவாழ் சண்முகத் தரசே
காரார் குழலாள் கலைமகள் நன்றாய்
என்னாவிருக்க யானுனைப்பாட
எனைத் தொடர்ந்திருக்கும் எந்தை முரகனைப்
பாடினேன் ஆடினேன் பரவசமாக
ஆடினேன் நாடினேன் ஆவின்ன பூதியை
நேசமுடன் யான் நெற்றியில் அணியப்
பாச வினைகள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே உன்னருளாக
அன்புடன் இரட்சி அன்னமுஞ் சொன்னமும்
மெத்த மெத்தாக வேலாயுதனார்
சித்திபெற் றடியேன் சிறப்புடன் வாழ்க!
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க்!
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க!
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க!
வாழ்க வாழ்க மலைக்குற மகளுடன்!
வாழ்க வாழ்க வாரணத்துவசம்
வாழ்க வாழ்க எம் வறுமைகள் நீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை யடியேன் எத்தனை செயினும்
பெற்றவன் நீகுரு பொறுப்ப துன்கடன்
பெற்றவள் குறமகள் பெற்றவ ளாமே
பிள்ளையென் றன்பாய்ப் பிரிய மளித்து
மைந்தனென் மீதுன் மனமகிழ்ந் தருளித்
தஞ்சமென் றடியார் தழைத்திட அருள் செய்
கந்தர் சஷ்டி கவசம் விரும்பிய
பாலன் தேவ ராயன் பகர்ந்ததைக்
காலையில் மாலையில் கருத்துடன் நாளும்
ஆசா ரத்துடன் அங்கம் துலக்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேசமுடன் ஒரு நினைவது வாகிக்
கந்தர் சஷ்டி கவசம் இதனைச்
சிந்தனை கலங்காது தியானிப் பவர்கள்
ஒரு நாள் முப்பத் தாறுருக் கொண்டு
ஓதியே செபித்து உகந்து நீ றணிய
அ'டதிக் குள்ளோர் அடங்கலும் வசமாய்த்
திசைமன்ன ரெண்மர் சேர்ந்தங்கு அருளுவர்
மாற்றல ரெல்லாம் வந்து வணங்குவர்
நவகோள் மகிழ்ந்து நன்மை யளித்திடும்
நவமத னெனவும் நல்லெழில் பெறுவர்
எந்த நாளும் ஈரெட்டாய் வாழ்வர்
கந்தர்கை வேலாங் கவசத் தடியை
விழியாய்க் காண மெய்யாய் விளங்கும்
விழியாற் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லாதவரைப் பொடி பொடி யாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்துரு சங்காரத்தடி
அறிந்தென துள்ளம் அஷ்டலட்சுமிகளில்
வீரலட்சுமிக்கு விருந்துணவாகச்
சூரபத் மாவைத் துணித்தகை யதனால்
இருபத் தேழ்வர்க்கு உவந்தமு தளித்த
குரபரன் பழனிக் குன்றினி லிருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்றி
எனைத்தடுத்தாட்கொள என்றன துள்ளம்
மேவிய வடிவுறும் வேலவா போற்றி
தேவர்கள் சேனா பதியே போற்றி
குறமகள் மனமகிழ் கோவே போற்றி
திறமிகு திவ்விய தேகா போற்றி
இடும்பாயுதனே இடும்பா போற்றி
கடம்பா போற்றி கந்தா போற்றி
வெட்சி புனையும்வேலே போற்றி
உயர்கிரி கனக சபைக்கோ ரரசே
மயில்நட மிடுவோய் மலரடி சரணம்
சரணம் சரணம் சரவண பவ ஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்

கந்தசஷ்டி கவசம் முற்றிற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 14 – 06 – 1966 | 17 – 10 – 2013 |

மாதகல்லைப் பிறப்பிடமாகவும், பிரான்சை வசிப்பிடமாகவும் கொண்ட

## அமரர் சுப்பிரமணியம் இந்திரகுமார்

மங்காத ஒளிச்சுடராய் ஒளிர்ந்திட்ட எம்
ஞானதீபம் ஒளியிழந்து போனதுவோ?
கள்ளமில்லா உள்ளமதும்
கபடமில்லா உம் மொழியும்
வெண்மலராய்ப் புன்சிரிப்பும்
காண்பதெப்போ இனியும்
கம்பீர நடையெங்கே கனிவும் கருணையும்
கலந்து நின்ற பார்வையெங்கே
ஆறுதல் கூற எமக்கு யாரோ
எம் சந்தன தென்றலை சாவுதான் சரித்ததுவோ?
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

அன்னாரின் மறைவினால் துயருற்றிருக்கும் அவரின் குடும்பத்தினருக்கு
எமது நிலையத்தின் சார்பாக ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு
அன்னாரது ஆத்மா சாந்தியடையவும் பிரார்த்தனை செய்கின்றோம்.

வில்வளை,
மாதகல்.

பிரிவால் துயருறும்
**கலைமகள் சனசமூகநிலையம்.**

தீபம் பிறிண்டேர்ஸ், 717, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம். T.P.: 077 2506234



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பணிவு உடையவன் இன் சொலன் ஆதல்
ஒருவரிற்கு அணி அல்ல மற்று பிற"

# நன்றி நவில்கின்றோம்



எமது குடும்பத்தலைவராக வாழ்ந்து எம் எல்லோரையும் நல்ல வழிப்படுத்தி நாடு போற்ற வாழ வழி செய்து இன்று பிரிவு எனும் கண்ணீர் கடலில் ஆழ்த்திவிட்டு 17.10.2013 அன்று மீளாத்துயில் கொண்ட எங்கள் குலதெய்வம் அமரர் சுப்பிரதமணியம் இந்திரகுமார் அவர்கள் சிவபதமடைந்த செய்தி கேட்டு சகல உதவிகளையும் வழங்கிய உற்றார், உறவினர், நண்பர்கள், மற்றும் அன்னாரின் துயரச் செய்தி கேட்டு தொலைபேசி மூலமாகவும், சமூகவலைத்தளங்கள்மூலமாகவும் அனுதாபச் செய்திகளை வெளியிட்டவர்களுக்கும் கண்ணீர் அஞ்சலிகள் வெளியிட்டவர்களுக்கும், இரங்கல் கூட்டம் நடாத்திய நண்பர்களுக்கும் பல வழிகளிலும் உதவிகளை செய்து தந்தவர்களுக்கும், ஈமக்கிரியைகளிலும் அந்தியேட்டி கிரியைகளில் பங்குபற்றியவர்களுக்கும நினைவு மலரை வெளியிட உதவிய அன்பர்களுக்கும் இந்நூலை அச்சிட்டு தந்த கவிதரன், வழக்கம்பரை அச்சகத்தினருக்கும் எமது நன்றிகளை தெரிவித்து கொள்கின்றோம்.




இங்ஙனம்
குடும்பத்தினர்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்ச விருட்சம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்

எது நடந்ததோ அது நன்றாகவே நடந்தது.
எது நடக்கிறதோ அது நன்றாகவே நடக்கிறது.
எது நடக்க இருக்கிறதோ
அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையது எதை இழந்தாய்
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய்?
அதை நீ இழப்பதற்கு.
எதை நீ படைத்திருக்கிறாய்
அது வீணாகுவதற்கு.
எதை நீ எடுத்துக் கொண்டாயோ
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதை கொடுத்தாயோ
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ
அது நாளை மற்றொருவருடையதாகிறது.
மற்றொருநாள் அது வேறொருவருடையதாகும்.
இதுவே உலக நியதியும்,
எனது படைப்பின் சாராம்சமுமாகும்.

-பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்-



Sivaranjanam 520

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org